
# RTI

# தகவலுக்கான உரிமை!



# தகவலுக்கான உரிமை என்றால் என்ன?

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 3 ம் பிரிவின்படி சகல பிரஜைகளுக்கும் தகவலுக்கான உரிமையுண்டு. இத் தகவலுக்கான உரிமை என்பது எந்தவொரு பகிரங்க அதிகார சபையின் ஆவணங்களிலுமுள்ள தகவல்களை அணுகுவதற்கான உரிமையாகும்.




இலங்கை அரசியலமைப்பின்படி இறையாண்மை மக்களிடமே காணப்படுகிறது. இவ்வதிகாரத்தை மக்கள் வினைத்திறனான முறையில் தங்கள் பிரதிநிதிகள் மூலமாக பிரயோகிப்பதற்கு, ஆட்சியமைப்பானது ஏற்றதானதாக மற்றும் வெளிப்படையானதாக காணப்படவேண்டும்.



பகிரங்கச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற தனியார் நிறுவனங்கள் உள்ளடங்கலாக எந்தவொரு பகிரங்க அலுவலரிடமிருந்தும் நீங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். பகிரங்க அலுவலர்கள் பொதுமக்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கே பொது நிதியைப் பயன்படுத்துகின்றனர்.



ஆகவே நீங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர். இதனால்தான் வெளிப்படையான ஆட்சியமைப்பு முறையொன்றினை உருவாக்கும் பொருட்டு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தகவலுக்கான உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**உங்களுடைய மதச்சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்ற ஏனைய பல உரிமைகளை பாதுகாத்துக்கொள்வதற்கு தகவலுக்கான உரிமை முக்கியமானதாகும்.**

# தகவலுக்கான உரிமை கட்டமைப்பில் பிரதான செயற்பாட்டா–ளர்கள் யாவர்?

- பகிரங்க அதிகார சபை
- தகவல் அலுவலர்
- தகவலுக்கான உரிமை ஆணைக்குழு



## பகிரங்க அதிகார சபை என்பது யாது அல்லது யார்?

1. அரசாங்கத்தின் ஏதேனும் ஓர் அமைச்சு அல்லது திணைக்களம்
2. இலங்கை அரசியலமைப்பினால் அல்லது ஏதேனுமோர் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் நிறுவனம்
3. பொதுக் கூட்டுத்தாபனம்
4. உள்ளூரதிகார சபை
5. அரசாங்கத்துடன் அல்லது உள்;ர் அதிகார சபையுடன் இணைந்து நியதிச்சட்ட அல்லது பகிரங்கப் பணியொன்றை மேற்கொள்ளும் தனியார் அமைப்பு அல்லது நிறுவனம் (நியதிச்சட்ட அல்லது பகிரங்கப்பணியிலடங்கும் செயற்பாடுகளின் எல்லைக்குட்பட்டு மட்டுமே)
6. மாகாண சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட ஏதும் ஓர் நிறுவனம்
7. அரச சார்பற்ற நிறுவனங்கள்
   - இலங்கை அரசாங்கத்தினால் அல்லது பிறநாட்டு அரசாங்கமொன்றால் அல்லது சர்வதேச அமைப்பொன்றின் மூலமாக பெருமளவான நிதியினைப் பெற்றுக்கொள்கின்ற மற்றும் மக்களுக்காக சேவையாற்றுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள்
8. யாதேனுமோர் சட்டத்தால் அங்கீகாரமளிக்கப்பட்ட அல்லது அரசினால், பொதுக்கூட்டுத்தாபனமொன்றினால் அல்லது மாகாண சபையினால் உருவாக்கப்பட்ட யாதேனுமொரு

**ஒவ்வொரு பகிரங்க அதிகார சபையும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு, ஆணையாளர்கள், தகவல் அலுவலர், மேன்முறையீடு அலுவலர் ஆகியோரின் தொடர்பாடல் விபரங்கள் மற்றும் தகவலைப் பெற்றுக் கொள்வதற்கு அறவிடப்படுகின்ற கட்டணம் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தல் வேண்டும். (பிரிவு 26)**

நிறுவனத்தால் பகுதியளவிலேனும் நிதியுதவியினைப் பெற்றுக்கொள்ளும் உயர் கல்வி நிறுவனங்கள்

9. யாதேனுமோர் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது அல்லது அரசினால், பொதுக்கூட்டுத்தாபனமொன்றினால் அல்லது மாகாண சபையினால் உருவாக்கப்பட்ட யாதேனுமொரு நிறுவனத்தால் பகுதியளவிலேனும் நிதியுதவியினைப் பெற்றுக்கொள்ளும் தனியார் கல்வி நிறுவனங்கள்

10. நீதி நிர்வாகத்திற்கென உருவாக்கப்பட்ட நீதிமன்றங்கள் மற்றும் நிறுவனங்கள்

## தகவல் அலுவலர் என்பவர் யார்? (பிரிவு 23)

- தகவல் அலுவலர் பகிரங்க அதிகார சபைகளால் நியமிக்கப்படுகின்றார்.
- நீங்கள் தகவலுக்கான கோரிக்கையை தகவல் அலுவலரிடமே முன் வைக்க வேண்டும்.
- அனைத்து பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலும் நீங்கள் தகவல்களை பெற்றுக்கொள்ள அணுக வேண்டிய ஒரு தகவல் அலுவலர் காணப்படுவார்.

## தகவல் அலுவலரின் கடமைகள் யாவை? (பிரிவு 25)

- தகவல் அலுவலர் கோரிக்கை ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின் அதனை ஏற்றுக் கொண்டமை தொடர்பில் எழுத்து வடிவில் அறிவிக்க வேண்டும்.

- ○ கோரிக்கையையும் அதற்காக வழங்கப்பட்ட பதிலையும் பதிவு செய்து ஆவணப்படுத்தல் வேண்டும்.
- ○ இயலுமான வரை சீக்கிரமாகவோ அல்லது பதினான்கு நாட்களுக்குள்ளாகவோ,
    - » கோரப்பட்ட தகவல்களை வழங்குவதா
    - » கோரிக்கையை நிராகரிப்பதா
    - » கோரிக்கை விடுத்த நபரிடம் முடிவினைத் தெரியப்படுத்துவதா
    - » என்பது தொடர்பில் தீர்மானித்தல் வேண்டும்.



## தகவலுக்கான உரிமை ஆணைக்குழு என்றால் என்ன? (பிரிவு 12)

பகிரங்க அதிகார சபை தகவல்களை வழங்காதவிடத்து அல்லது அதனது கடமைகளை நிறைவேற்றத் தவறுமிடத்து செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கு பொறுப்பாக காணப்படும் ஆணைக்குழு தகவலுக்கான உரிமை ஆணைக்குழு எனப்படும்.

# தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான படிமுறைகள் யாவை?

- தகவலை கோருவதற்காக நீங்கள் எக்காரணமும் கூறத்தேவையில்லை என்பதோடு உங்களது தொடர்பு விபரங்கள் தவிர்ந்த வேறு எவ்வித தனிப்பட்ட விபரங்களையும் வழங்கத் தேவையில்லை.
- கோரப்படும் தகவலானது உங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் தொடர்புள்ளதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**1.**

தகவல் அலுவலரிடம் எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றை வைத்தல்

**2.**

தேவையான தகவல்கள் தொடர்பான விபரத்தினை வழங்கவும்

**3.**

கோரிக்கையை எழுத்து மூலமாக முன் வைக்க முடியாதவிடத்து வாய்வழியாக கூற முடியும் என்பதோடு அதனை தகவல் அலுவலர் எழுத்து வடிவாக்கி கொள்வார்

**4.**

உங்கள் கோரிக்கையின் பகுதியொன்றாக பின்வரும் விடயங்களை குறிப்பிடுவது சிறந்ததாகும்*

**5.**

கோரிக்கையின் பிரதியொன்றை வைத்துக் கொள்ளல்

**6.**

உங்களது கடிதத்தை பதிவுத் தபாலில் அனுப்பி பதிவுத் தபால் ரசீதினை வைத்துக் கொள்ளல்

**7.**

உங்களது கோரிக்கையினை ஏற்றுக் கொண்டமையினை உறுதிப்படுத்தி எழுத்து மூல ஏற்புதல் ஒன்றைப் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்

* - நீங்கள் தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் தகவலை கோருகின்றீர்கள்
- பதிலினை பெற விரும்பும் மொழி
- உங்களது தொடர்பு விபரங்கள்
- நீங்கள் ஒரு இலங்கைப் பிரஜை

# உங்களது கோரிக்கை ஏற்கப்பட்டால் உங்களுக்குரித் – தான உரிமைகள் யாவை?

- நீங்கள் பெற்றத் தகவலை வெளியிடும் உரிமை உங்களுக்கு உண்டு (பிரிவு 36)
- நீங்கள் பெற்றத் தகவலை வழக்கொன்றில் சாட்சியமாக பயன்படுத்த இயலும்

## கால அளவு




கோரும் தகவலானது ஒரு நபரது உயிர் அல்லது தனிப்பட்ட சுதந்திரம் சம்பந்தமானதெனில் பதிலானது 48 மணி நேரத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும் (பிரிவு (25 (3))

பதினான்கு முதல் ,ருபத்தெட்டு நாட்களுக்குள் தகவலை அணுகும் உரிமை (பிரிவு 25)

சில வரையறுக்கப்பட்ட காரணங்கள் காணப்படுமாக இருப்பின் தகவல் அலுவலர் தகவலை வழங்குவதற்கு இருபத்தொரு நாட்கள் வரை அவகாசம் கேட்கலாம் (உதாரணமாக தகவல் வேறொரு இடத்தில் இருந்தால் அல்லது அதிக எண்ணிக்கையிலான தகவல்கள் கோரப்பட்டிருப்பின்)

### தகவலுக்கான உங்களுடைய கோரிக்கை:



- அனுமதிக்கப்படுமிடத்து நீங்கள் குறித்த வேலையினை, ஆவணங்களை, ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை அல்லது பதிவேடுகளைப் பரிசீலனை செய்ய இயலும் என்பதுடன் தகவலை யாதேனுமொரு மின்னியல் முறையில் அல்லது கணிணி அச்சாக பெற்றுக் கொள்ளவும் இயலும் (பிரிவு 27)



- மறுக்கப்படுமிடத்து தகவல் அலுவலர் பின்வரும் விடயங்களை கூறுதல் வேண்டும்:
    - மறுத்தமைக்கான காரணம்
    - மேன்முறையீடு செய்வதற்கான மேன்முறையீட்டு அலுவலர் யாரெனவும் மேன்முறையீடொன்றினை மேற்கொள்ள ,ருக்கின்ற காலம் எவ்வளவெனவும் தெரிவிக்கவேண்டும் (பிரிவு 28)

# மேன்முறையீட்டு நடபடிமுறைகள் யாவை?

நீங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் மூன்று இடங்களில் மேன்முறையீடு செய்ய இயலும்.

- மேன்முறையீட்டு அலுவலர் (பிரிவு 31)
- தகவலுக்கான உரிமை ஆணைக்குழு (பிரிவு 32)
- மேன்முறையீட்டு நீதிமன்றம் (பிரிவு 34)

1) தகவல் அலுவலருக்கெதிராக மேன்முறையீட்டு அலுவலருக்கு நீங்கள் மேன்முறையீடு செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள்:

1. தகவலை அணுகுவதற்கான கோரிக்கையை மறுக்கும்போது
2. காலத்தேவைப்பாடு தொடர்பில் இணங்காதிருக்கும் போது
3. பூரணமற்ற, பொய்யான அல்லது தவறாக வழிகாட்டும் தகவலை வழங்கும்போது
4. அதிகப்படியான மேலதிகக் கட்டணம் கோரும்போது
5. கோரப்பட்ட விதத்தில் தகவலை வழங்காதிருக்கும்போது
6. வேண்டுமென்றே தகவல்கள் சிதைக்கப்பட்டால், அழிக்கப்பட்டால் அல்லது தவறவிடப்பட்ட சந்தர்ப்பத்தில்:

**உங்களது கோரிக்கை நிராகரிப்பட்டு பதினான்கு நாட்களுக்குள் மேன்முறையீட்டு அலுவலருக்கு மேன்முறையீடு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.**

- மேன்முறையீட்டு அலுவலர் மேன்முறையீட்டை ஏற்றவுடன் மேன்முறையீட்டை ஏற்றுக் கொண்டமைக்கான ரசீதொன்றை வழங்க வேண்டும்.
- மூன்று வாரங்களுக்குள் மேன்முறையீட்டிற்கான தீர்வு எடுக்கப்படுதல் வேண்டும்.
- தீர்வுக்கான காரணங்களையும் அவற்றுக்கான அடிப்படைகளையும் தீர்வானது உள்ளடக்க வேண்டும்.

2) தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கு நீங்கள் எப்போது மேன்முறையீடு செய்யலாம்?

- மேன்முறையீட்டு அலுவலரின் தீர்வில்

**மேன்முறையீட்டு அலுவலருக்கோ அல்லது தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கோ உங்களால் மேன்முறையீடு செய்ய முடியாது போகுமிடத்து, உங்கள் சார்பாக மேன்முறையீடு செய்வதற்கான அதிகாரத்தினை நீங்கள் வேறொரு நபருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். (பிரிவு 33)**

நீங்கள் திருப்தியடையாதவிடத்து தீர்வின் திகதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கு நீங்கள் மேன்முறையீடு செய்யலாம்.

- தகவலுக்கான உரிமை ஆணைக்குழு முப்பது நாட்களுக்குள் தீர்வொன்றுக்கு வருதல் வேண்டும்.
- தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் தீர்வானது எழுத்து வடிவில் கீழ்வருவோருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்:
  - » தகவலை கோரிய நபருக்கு
  - » தகவல் அலுவலருக்கு மற்றும் பகிரங்க அதிகார சபைக்கு

3) மேன்முறையீட்டு நீதிமன்றம்:

- தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் தீர்வில் திருப்தியடையாத தனி நபரொருவரோ அல்லது பகிரங்க அதிகார சபையோ மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கிடலாம்.



## உங்களுக்குத் தெரியுமா?

இலங்கை அரசியலமைப்பின் 14அ உறுப்புரையின்படி தகவலுக்கான உரிமையும் ஒரு அடிப்படை உரிமையாகும். ஆகவே இது தொடர்பில் நீங்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை கூட தாக்கல் செய்யலாம்.

# இலங்கையின் தகவலுக்கான உரிமை வரலாற்றின் சில முக்கிய நிகழ்வுகள்

## 1996

### ஆலோசனைக் குழுவின் விதந்துரை

வெகுஜன ஊடக அமைச்சானது பத்திரிகைத்துறையின் சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் ஆகியவற்றைப் பாதிக்கும் சட்டங்களை திருத்துவதற்காக ஆலோசனைக் குழுவொன்றை நியமித்தது. இவ் ஆலோசனைக் குழுவின் 3 ஆவது விதந்துரையில், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்திற்கிணங்க தகவலுக்கான உரிமையினையும் கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரத்தின் கீழ் சேர்த்துக் கொள்ள வேண்டும் என கூறப்பட்டது.

## 2000

### தோல்வி கண்ட அரசியலமைபபிற்கான முயற்சியில் உட்சேர்க்கப்பட்டிருந்தது

புதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது தகவலுக்கான உரிமையும் அடிப்படை உரிமைகளின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டது. எவ்வாறெனினும் இம்முயற்சி தோல்வியுற்றது.

## 2004

### அமைச்சரவை சட்டமூலமொன்றை நிறைவேற்றியது

நுனவைழசள புரடைனஇ சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகியவற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமூலமொன்று அமைச்சரவையினால் நிறைவேற்றப்பட்டு, நீதி அமைச்சினால் இறுதியாக முடிவுசெய்யப்பட்டது. எவ்வாறெனினும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட சட்டமூலத்தின் மீதான அரசாங்கத்தின் அக்கறை இல்லாமற் போனது.

## 2006

### இலங்கை சட்ட ஆணைக்குழுவின் பிரேரணை

இலங்கையானது ஐக்கிய நாடுகள் சபையின், நாடு கடந்து புரியும் திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கெதிரான சர்வதேச சமவாயம் மற்றும் ஊழலுக்கெதிரான சமவாயம் போன்றவற்றில் கையெழுத்திட்டுள்ளதன் அடிப்படையில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை நிறைவேற்ற வேண்டும் என விதந்துரைத்து, சட்ட ஆணைக்குழுவானது ஒரு சட்டமூலமொன்றினை அறிமுகம் செய்தது.

## 2010

### பாராளுமன்ற உறுப்பினர்களின் ஈடுபாடு

மிலிந்த மாரகொட, விஜேதாச இராஜபக், கரு ஜயசூரிய மற்றும் திலங்க சுமதிபல ஆகிய அரசாங்க மற்றும் எதிர் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தனி உறுப்பினர் சட்ட மூலங்கள் உள்ளடங்கலான சட்டமூலங்களை வெற்றிகரமற்ற முறையில் பாராளுமன்றத்திற்கு அறிமுகம் செய்தனர்.

## 2011

### கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும்

நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் (LLRC) விதந்துரை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் அறிக்கையானது, கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரமானது நலலிணக்கச் செயற்பாடுகளில் ஒரு பிரதான பங்கினை வகிக்கும் என கூறியதுடன், தகவலுக்கான உரிமையினை உறுதிப்படுத்துகின்ற வகையில் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் எனவும்

## 2015

### பிரச்சார வாக்குறுதி

ஜனாதிபதித் தேர்தலின் 'பொது வேட்பாளரான' மைத்திரிபால சிறிசேன, அவர் பதவியேற்று 100 நாட்களுக்குள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

## 2016

### தகவலுக்கான உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

மார்ச் மாதம் பாராளுமன்றத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமூலமானது, உச்ச நீதிமன்றத்தின் முடிவுகள், மாகாண சபைகளின் முன்மொழிவுகள் மற்றும் அரசாங்கம் மற்றும் எதிரணியில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றினைத் தொடர்ந்து திருத்தங்களுக்கு உட்பட்டு ஆகஸ்ட் மாதத்தில் சட்டமாகியது.

மூலம்: https://www.rti.gov.lk/about-rti/history

# எவ்வகையானத் தகவல்கள் வழங்குவதற்கு மறுக்கப்படலாம்?

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5(4)ம் பிரிவானது கோரப்படுகின்ற குறிப்பிட்ட தகவலை வெளியிடுவதனால் ஏற்படும் பாதிப்பின் அளவை விட, அத்தகவலை வெளியிடுதல் பொது அக்கறைக்கு மிகவும் முக்கியமானதாயின் அத்தகவல் கோரிக்கையை நிராகரிக்க முடியாது.




தனிப்பட்ட தகவல்கள்




தேசிய பாதுகாப்பை பாதிக்கக்கூடிய தகவல்கள்



பொருளாதாரத்தை பாதிக்கக்கூடிய தகவல்கள்



மருத்துவ ஆவணங்கள்



பகிரங்க அதிகார சபைக்கும் தொழில் வல்லுனருக்கும் இடையேயான தொடர்பாடல்



நம்பிக்கை சார்ந்த உறவுமுறை அடிப்படையிலான தகவல்கள் (உதாரணமாக சட்டத்தரணிக்கு அவரது கட்சிக்காரர் வழங்கும் தகவல்கள்)



நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான தகவல்கள்



பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபைகளின் சிறப்புரிமையை மீறும் வகையிலான தகவல்கள்



பரீட்சை ஒன்றின் கௌரவத்தினைப் பாதிக்கும் வகையிலான தகவல்கள்

தீர்மானம் செய்யப்படும் முன்னரான சில அமைச்சரவை பத்திரங்கள்






தேர்தல் தொடர்பான நம்பகமான தகவல்கள்

# நீங்கள் தகவலுக்கான உரிமையினை மதச் சுதந்திரத்திற்காக எவ்வாறு பாவிக்கலாம்?



1. நீர், மின்சாரம் போன்ற ஏதேனும் அடிப்படைத் தேவைகள் உங்களின் மத நம்பிக்கை காரணமாக உங்களுக்கு மறுக்கப்படுமிடத்து பின்வரும் தகவல்களை கோரும் உரிமை உங்களுக்கு உண்டு:
    - குறிப்பிட்ட அதிகாரசபை அத்தகைய விடயங்களை தீர்மானிப்பதற்குரிய பொருத்தமான அல்லது சட்ட ரீதியான அதிகாரசபையா என்பது பற்றி
    - எந்த சட்ட அடிப்படையின் கீழ் இவ் அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுகின்றன என



2. உங்கள் பிள்ளையின் பாடசாலை அனுமதி தொடர்பில் அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள் யாவற்றையும் நீங்கள் பூர்த்தி செய்த பின்பும், மதத்தின் அடிப்படையில் பாடசாலை அனுமதி மறுக்கப்பட்டால், அனுமதி மறுக்கப்பட்டமைக்கான காரணங்களை பின்வரும் நிறுவனங்களிடம் கோரலாம்:
    - பாடசாலை
    - பொருத்தமான உள்ளூர் கல்வி நிறுவனம்
    - கல்வி அமைச்சு



3. 2008 ஆம் ஆண்டின் சுற்றறிக்கையை மேற்கோள் காட்டி உங்களது வழிப்பாட்டு தலத்தை பதிவு செய்யுமாறு கட்டாயப்படுத்தினால் குறிப்பிட்ட அதிகார சபையிடம் பின்வரும் விடயங்களைக் கேட்க இயலும்:
    - சுற்றறிக்கை எவ்வாறு சட்டமாகிறது
    - எச் சட்டங்கள் மதத்தலங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்று தேவைப்படுத்துகின்றன



4. சகல சட்டத் தேவைப்பாடுகளையும் நீங்கள் பூர்த்தி செய்திருக்கும் போதும்:

   - வழிப்பாட்டுத் தலமொன்றை கட்டுவதற்கு நீங்கள் தடுக்கப்பட்டால்
   - உங்களுடைய திட்ட வரைபடங்களுக்கு குறிப்பிட்ட அதிகார சபையினால் அனுமதியளிக்கப்படாவிட்டால்

   குறிப்பிட்ட அதிகார சபையிடம் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக கேள்வி கேட்க இயலும்:

   - குறிப்பிட்ட அதிகாரசபை அத்தகைய விடயங்களை தீர்மானிப்பதற்குரிய பொருத்தமான அல்லது சட்ட ரீதியான அதிகாரசபையா என்பது பற்றி
   - உங்களுடைய திட்ட வரைபடங்களுக்கு குறிப்பிட்ட அதிகார சபை அனுமதி வழங்காதமைக்கான அடிப்படைகள், அல்லது
   - வழிப்பாட்டுத்தலத்தை கட்டுவதனை தடை செய்வதற்கான அடிப்படைகள்




5. உங்கள் வழிப்பாட்டுத் தலம் பலாத்காரமாக மூடப்பட்டால் குறிப்பிட்ட அதிகார சபையிடம் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக கேள்வி கேட்க இயலும்:

   - குறிப்பிட்ட அதிகாரசபை அத்தகைய விடயங்களை தீர்மானிப்பதற்குரிய பொருத்தமான அல்லது சட்ட ரீதியான அதிகாரசபையா என்பது பற்றி
   - எந்த சட்டத்தின் கீழ் அல்லது எந்த அடிப்படையின் கீழ் உங்கள் வழிப்பாட்டுத் தலம் மூடப்பட்டது



6. பிரார்த்தனை நடத்துவதற்கென ஏதேனுமொரு பிரதேசத்திற்குள் செல்வதற்கான உங்களுடைய சுதந்திரம் மறுக்கப்படுமாயின், குறிப்பிட்ட அதிகார சபையிடம் பின்வரும் தகவல்களைக் கேட்கலாம்:

    - குறிப்பிட்ட அதிகாரசபை அத்தகைய விடயங்களை தீர்மானிப்பதற்குரிய பொருத்தமான அல்லது சட்ட ரீதியான அதிகாரசபையா என்பது பற்றி
    - ஓர் கிராமத்தினுள் அல்லது யாதாயினும் புவியியல் பிரதேசத்தினுள் பிரார்த்தனை நடத்துவதற்கென செல்வதற்கான உங்களுடைய சுதந்திரம் ஏன் மறுக்கப்பட்டது




7. பொது இடுகாட்டில் சடலமொன்றை அடக்கம் செய்வதற்கான உங்களுடைய உரிமை உங்கள் மதத்தின் அடிப்படையில் மறுக்கப்படுமாயின், குறிப்பிட்ட அதிகார சபையிடம் கீழ்வரும் தகவல்களைக் கோரலாம்:

    - குறிப்பிட்ட அதிகாரசபை அத்தகைய விடயங்களை தீர்மானிப்பதற்குரிய பொருத்தமான அல்லது சட்ட ரீதியான அதிகாரசபையா என்பது பற்றி
    - உங்களுடைய உரிமை மறுக்கப்பட்டமைக்கான சட்ட அடிப்படை

## மேலதிக தகவல்கள் தேவைப்படுமிடத்து, தொடர்புக்கு:

<ins>தகவலுக்கான உ ரிமை ஆணைக்குழு</ins>

அறை இலக்கங்கள் 203-204, தொகுதி 2
பண்டாரநாயக்க நினைவு சர்வதேச சம்மேளன மண்டபம்
பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07
மின்னஞ்சல்: rti.commission16@gmail.com
வலைத்தளம்: www.rticommission.lk/web/index.php?lang=en
தொலைபேசி அல்லது தொலைநகல்: 011 269 1625

<ins>நிதி மற்றும் பொது ஊடக அமைச்சு</ins>

163 அசிதிசி மெதுர,
கிருலப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொட, கொழும்பு 05
மின்னஞ்சல்: info@media.gov.lk
தொலைபேசி: 011 251 3459, 011 251 3460, 011 251 2321,
011 251 3498
வலைத்தளம்: www.rti.gov.lk | www.media.gov.lk

<ins>இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம்</ins> (NCEASL)

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் ஆனது சுவிசேஷ கிறிஸ்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு அமைப்பாக, இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் மதச்சுதந்திரத்தினை பாதுகாக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

முகவரி: இல 113, தெஹிவளை, இலங்கை
தொலைபேசி: 011 551 1358
மின்னஞ்சல்: legal@nceasl.org
வலைத்தளம்: www.nceasl.org

© The National Christian Evangelical Alliance of Sri Lanka (NCEASL)
All rights reserved.